Registered as a Newspaper

பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்


THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 06 (21-11-93) ஞாயிற்றுக்கிழமை ஓசை 276


நல்லூர் வீ... நூலகம்
...
யாழ்ப்பாணம்

## சிறப்புற நடந்த 'புலிகளின்குரல்' 3ஆம் ஆண்டு நிறைவு விழா

புலிகளின்குரல் வானொலி தனது மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவை நேற்று சிறப்பாக கொண்டாடியது. நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நிதர்சனப் பொறுப்பாளர் ஜவான் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கள விளக்கை இயலிசைவாருதி வீரமணிஐயர் ஏற்றிவைத்தார். வரவேற்புரையை திரு. விசுவலிங்கமும் ஆசியுரையை யாழ். பல்கலைக்கழக தமிழத்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும், கலை பண்பாட்டுக்கழகத் துணைப் பொறுப்பாளர் சேரலாதனும் சிறப்புரையை வீரமணிஐயரும் நிகழ்த்தினர். இதனை அடுத்து புலிகளின்குரலின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதை, நாடகப்போட்டிகளில் பரிசு (4ஆம் பக்கம் பார்க்க)



பூநகரி படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஒரு பகுதி ஆர்.பி.ஜி எறிகணை செலுத்திகளை முதலாவது படத்திலும் எறிகணைகள், ஆர்.பி.ஜி எறிகணைகள், கண்ணி வெடிகள், 40எம்.எம்.எறிகணைகள், கைக்குண்டுகள், பலரக ரவைகள மற்றும் வெடிப்பொருள்கள் என்பனவற்றின் ஒரு தொகுதியை இரண்டாவது படத்திலும் காணலாம்.



# பூநகரியில் ஏற்பட்ட தோல்வி அரசை மீளமுடியா இக்கட்டில்சிக்கவைத்தது!

### புலிகளின்குரல் ஒலிபரப்பு நீடிப்பு

இன்று காலை மாவீரர் வாரஆரம்பநிகழ்வாகதமிழீழ தேசியக் கொடிஏற்றப்படவிருப்பதைமுன்னிட்டுபுலிகளின் குரல் வானொலியின் சேவை காலை 8.00 மணி முதல் 9.30 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

## மீட்சிக்கு வழி இருப்பதாகவும் இல்லையாம்

(கொழும்பு)

"பூநகரியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் அரசாங்கம் மீள முடியாத இக்கட்டான நிலை ஒன்றில் சிக்கிப் போயுள்ளது. இந் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்திற்கு ஒரு வழி இருப்பதாகவும் தெரியவில்லை" இவ்வாறு பி. பி. ஸி சிங்கள சேவைக்கு 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி அர...னால் அதற்கு இறுதியாக இக்கொள்கையினால் இரு கொள்ள உள்ளது.

## இன்று தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பிக்கும்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயகத்தின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம்செய்த மாவீ... வாரம்அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. இறுதி நாளன்று மாவீரர்நாள் அனுஷ்டிக்கப்படும்.

சகல பாடசாலைகள், சகல அரசதிணைக்களங்கள், அரச செயலகங்கள், கூட்டுறவுச் சங்க அலுவலகங்கள், சன...

## பூநகரியில் ஏற்பட்ட தோல்வி அரசை

# மீளமுடியா இக்கட்டில்சிக்கவைத்தது!

### நீடிப்பு

இன்று காலை மாவீரர் வாரஆரம்பநிகழ்வாகதமிழீழ தேசியக் கொடிஏற்றப்படவிருப்பதைமுன்னிட்டு புலிகளின் குரல் வானொலியின் சேவை காலை 8.00 மணி முதல் 9.30 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

## மீட்சிக்கு வழி இருப்பதாகவும் இல்லையாம்

(கொழும்பு)

**“பூநகரியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் அரசாங்கம் மீள முடியாத இக்கட்டான நிலை ஒன்றில் சிக்கிப் போயுள்ளது. இந் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்திற்கு ஒரு வழி இருப்பதாகவும் தெரியவில்லை” இவ்வாறு பி. பி. ஸி சிங்கள சேவைக்கு ‘ராவய’ ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தற்போது கடைப்பிடித்துவரும் கொள்கையினால் அதற்கு இறுதியாக கிடைக்கப்போவது சிங்கள, தமிழ் இனங்களின் வெறுப்பே இக்கொள்கையினால் இரு இனங்களினதும் வெறுப்பை அரசாங்கம் சம்பாதித்துக் கொள்ள உள்ளது.

பூநகரியில் ஏற்பட்ட இழப்பினால் சிங்கள மக்களிற்கு அரசின் மீது ஏற்பட்ட கோபமும் எதிர்ப்பு உணர்வும் இன்னும் தணிந்ததாக இல்லை. இராணுவத்தினரதும் கடற்படையினரதும் பெற்றோர், உற்றார், உறவினர்களிடம் இந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்புக்கள் உருவாகியுள்ளன.

பூநகரியில் சிக்கிக்கொண்ட தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பது குறித்து அறியமுடியாத நிலையில் பெற்றோர் உள்ளனர்.

மேலும் 120 எம்.எம். பீரங்கிகள் சில புலிகளிடம் சிக்கியுள்ளமை யுத்தம் முழுமையாக வேறொருவடிவத்தை அடைந்துவிடக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது. இன்று இராணுவ கடற்படையினர் உயிரிழப்பைப் பற்றிச்

(4ஆம் பக்கம்பார்க்க)

## 662 இராணுவத்தினர் பலி; 563 படையினர் படுகாயம்

### அரச தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுத்தளம் மீது கடந்த 11-ம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகள் ஆரம்பித்த தாக்குதலில் 662 படையினர் கொல்லப்பட்டதாகஅல்லது காணாமல் போயுள்ளதாக அரசு தரப்பு அறிவித்துள்ளது.

மேலும் இத் தாக்குதலின் போது படுகாயமடைந்த 563 படையினர் தென்பகுதியிலுள்ள வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

192 இராணுவத்தினரின் சடலங்கள் முகாம் சுற்றாடலில்கண்டெடுக்கப்பட்டுபுதைக்கப்பட்டுள்ளன.

கடந்த 11-ம் திகதி புலிகள் இத்தாக்குதலை ஆரம்பித்த போது இம்முகாமில் 1800 படையினர் இருந்துள்ளனர் இவர்களில் 450 பேர் காயம் எதுவுமின்றி அங்கிருந்து மீட்கப்பட்டனர் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் இறந்தவர்களின் அல்லது காணாமல் போனவர்களின் தொகை 662 என அறிவித்துள்ள போதிலும்இத் தொகை சுமார் 800க்குமேல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பிக்கும்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயகத்தின் விடுதலைக்காகத் தம் இன்னுயிர்களைத் தியாகம்செய்த மாவீரர்களை நினைவுகூருவதற்கான மாவீரர் வாரம் இன்று தமிழீழமெங்கும்எழுச்சியுடன் ஆரம்பமாகின்றது.

இன்றுமுதல் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை மாவீரர் வாரம்அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. இறுதிநாளன்று மாவீரர்நாள் அனுஷ்டிக்கப் படும்.

இன்று காலை 9.00 மணியளவில் தமிழீழத்தின் தேசியக்கொடி ஏற்றப்படுவதுடன் தமிழீழ மாவீரர் வாரம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகும்.

சகல பாடசாலைகள், சகல அரசதிணைக்களங்கள், அரச செயலகங்கள், கூட்டுறவுச் சங்க அலுவலகங்கள், சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொது சன அமைப்புக்கள், கிராமிய நிறுவனங்கள் ஆகியவற்றிலும் விடுதலைப் புலிகள் அலுவல

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் மீதான தாக்குதல்; விரைவு படுத்த யோசனை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க கடும் முயற்சிகள் எடுப்பதைவிட புலிகளின்தலை போன்ற யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு இராணுவத்தினர் தீவிர திட்டம் இடவேண்டும் என்னும் யோசனை தற்போது இராணுவத்தினர் மத்தியில் பரவலாக பேசப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் இவ்வாறு வடக்கு கிழக்குப் பகுதி முழுவதையும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் கூட பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்தாமல் வெறும் இராணுவ வெற்றி மூலம் பிரச்சினை தீர்ந்து விடும் என்று சிங்கள அரசியல்வாதிகளோ அல்லது இனவாதிகளோ எதிர்பார்த்தால் அது உலக வரலாறு அறியாத அறியாமையாகத்தான் இருக்க முடியும். இவ்வாறு வெரித்தாஸ் வானொலி தனது செய்திக்கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

மேலும் பூநகரித்தோல்வி மூலம் பின்னடைவைச் சந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி படைத்தளம் வீழ்ச்சி ஆராய விசாரணைக்குழு நியமனம்

(கொழும்பு)

பூநகரி படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டதைபிட்டுவிசாரணை நடத்துவதற்கென இராணுவ நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின இத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பிரிகேடியர் நந்தா டி. சில்வா தலைமையிலான இந்த இராணுவ நீதிமன்றத்தில் பிரிகேடியர் சதீஸ்ஜெய சுந்தர, கேணல் சரத்பொன்சேகா, லெப். கேணல் டி. ரட்ணசபாபதி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரி முகாமின் வீழ்ச்சிக்கு காரணம் என்ன என்பது பற்றியும் இதற்கு காரணமாயிருந்தவர்கள் யார் என்பது

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதிலடி கடுமையாக இருக்கும்

சிறிலங்கா இராணுவத்தினரால்வடபகுதியில் நடத்தப்படும் எந்தவொரு பாரிய தாக்குதலுக்குமான பதிலடி கடுமையானதாகவே இருக்கும் என விடுதலைப் புலிகள் பூநகரி முகாம்மீதான தாக்குதல்மூலம் உணர்த்தியிருப்பதாக சர்வதேச வானொலி ஒன்றின் செய்தி விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி அச் செய்தி விமர்சனத்தில் யாழ். குடாநாட்டைப் பிடிப்பதற்கான இராணுவம் தாக்குதல் நடத்தினால், அதன் பின்விளைவுகள் கடுமையானதாகவே இருக்கும் என்பதைப் புலிகள் இதன்மூலம் உணர்த்தியுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

### எனது இராணுவ சேவையில்

## இது போன்ற மூர்க்கமான தாக்குதலை சந்திக்கவில்லை!

### பூநகரியில் உயிர்தப்பிய கேணல்

(கொழும்பு)

‘‘எனது இராணுவ சேவையில் இது போன்ற மூர்க்கமான தாக்குதலை எதிர்கொண்டதில்லை’’ என பூநகரி தளத்தின் மீது புலிகள் நடாத்திய தாக்குதலின் போது உயிர்பிழைத்தகேணல் ரஞ்சித் சில்வாதெரிவித்தார்.

தாம் எதிர்பாராத எண்ணிக்கையிலான பெருமளவு புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டதாக அவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் தடுத்துவைக்கப்பட்ட 40 பொதுமக்கள் புலிகளால் மீட்பு

(பூநகரி)

விடுதலைப் புலிகளின் பூநகரி-நாகதேவன்துறை மீதான தாக்குதலின்போது, இராணுவத்தினரால் பிடித்துவைக்கப்பட்டிருந்த 40 தமிழ் பொதுமக்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டுள்ளனர். இந்தக் கைதிகளில் பல பெண்களும் அடங்குவர்.

மீட்கப்பட்ட அனைவரும் பூநகரியை அண்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இரண்டு வருடகாலம் இம் முகாம் பகுதியில் படையினரால் சிறைவைக்கப்பட்டிருந்தனர்.

சம்பவதினம், இம் முகாம் மீதான தாக்குதலின்போது, அச்சத்தின் காரணமாக நிலத்தில் வீழ்ந்து படுத்துக்கிடந்த போது விடுதலைப் புலிகள் இவர்களைக் கண்டு மீட்டு வந்துள்ளனர்.

1991 அக்டோபர் மாதம் பூநகரி-சங்குப்பிட்டி பகுதியை கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் சுமார் 50பேர்வரை கைது செய்து சிறைப்படுத்தி வைத்திருந்தனர்.

இவர்களில் எட்டுப்பேர் மருத்துவ வசதியீனத்தாலும், வேறு காரணங்களினாலும் அங்கேயே இறந்துள்ளனர். மிகுதிப்பேர் இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளான

(4ஆம் பக்கம் பார்க்க)

**மாவீரர் நாள் நவம்பர்-27**

இளைஞனே - சிந்தித்துப்பார்
எதிரியின் கொடூரம் தெரிந்துமா?
தயங்குகிறாய் - தாயக மானங்காக்க-
வந்திடுவாய். - தமிழ்த்தாய்

**சுன்னாகம் வர்த்தக சங்கம்**

(6657)

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்கம் பாவித்த எனது மணியப்ஸ் கட்டிடம் 1அம்மாடி காரியாலய பாவிப்புக்கு வாடகைக்குவிடப்படும்! தேவையானவர்கள் மணியம்ஸ் ஸ்டவைக் கடையில் தொடர்பு கொள்ளவும் செ.''சுப்பிரமணியம் (6626)

### கருத்துரை

''பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் நாளை திங்கள்காலை 9 30 மணிக்கு நல்லூரில் இயங்கும் நவ உதயம் நிறுவனத்தில் தொழில்பயிலுனருக்கானகருத்தரங்கில் 'உழைப்பும், நிர்வாகமும்'' என்னும் பொருள் பற்றி கருத்துரை அளிப்பார் என அறிவிககப்படுகிறது''

### விவசாய அறிமுக அட்டை உடன்பெறவும்

1993 | 94கால போகத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள இருக்கும் விவசாயிகள் அனைவருக்கும் விதை உருளைக்கிழங்கானது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டு வரும் விவசாய அறிமுக அட்டையில பதிவு செய்தே வழங்கப்படவுள்ளது.

### தங்கப்பதக்கம் வென்றார்

பண்ணிசைப் போட்டியில் முதலாமிடம் வென்ற மாணவி தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் ஆரம்ப கீழ்ப்பிரிவில் முதலாமிடத்தை வென்ற செல்வி சிறிமகள் சிறீரங்கநாதனுக்கு அண்மையில் யாழ். இந்து ஆரம்பப் பாசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தங்கப்பதக்கத்தை வழங்கினார். இத்தங்கப்பதக்கம் வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் அன்பளிப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### எறிகணை வீச்சு

(தொல்புரம்)

மாதகல் பகுதியில் நிலை

## 54-வது நாள் நினைவுப் பூக்கள்



**கப்டன் மோகனரூபன்/சாந்தன்**

(தங்கவேல் ராதாமோகன்)

மலர்வு: 21-11-1971 வீரச்சாவு: 29-09-1993

அஞ்சா நெஞ்சுடன் அழகுதமிழ் பேசி தமிழ் அன்னைக்கு தன்னையே ஆகுதியாக்கிய கப்டன் சாந்தனின் நினைவு நிகழ்வும், மதிய போசன விருந்தும் 21-11-1993 இன்று எமது இல்லத்தில் நிகழவிருப்பதால் சக போராளிகளையும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

மிந்திரன் அம்மன் கோவிலடி,
துன்னாலை,
கரவெட்டி.

(6633)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்; 27 — 09 — 1968



தாயக மண்ணில்; 21 — 11 — 1990

**லெப்டினன்ட் தம்பி**

(கந்தசாமி தம்பி)

[மயிலிட்டி]


மடியினில் ஏந்திய மாதாவின் — அன்புப்
பிடியினில் இருந்து நழுவி,
விடியலைத் தேடிப் பறந்திட்ட—வெண்
புறாவிற்கு எம் அஞ்சலி.

உரிமையுடன்
பெற்றோர், சோதரர்

66/10, இந்துமகளிர் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(6648)

## வீரவணக்கம்





**லெப். கணேஷ் 2-ம் லெப். தினேஷ்**

செல்வன் தி. டொமினிச்சாந்தன்
பிறப்பு: 05-08-1964 வீரச்சாவு: 21-11-1986

செல்வன் தி. அன்ரன் தினேஷ்
பிறப்பு: 13 06-1969 வீரச்சாவு: 27-11-1989

''உங்கள் சுவடுகளில் தொடரும்
எங்கள் பாதங்கள்''

''சாந்திநேஷ்''
பளை,

குடும்பத்தினர், நண்பர்கள்.

(6643)

## கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் சித்தன்கேணி

மேற்படி மன்றத்தின் கல்விக்குழுவினால் நடத்தப்படவிருக்கும் க பொ. த. ப. (சா/தரப்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம்-இலவச போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர அட்டவணை பின்வருமாறு:

28.11.93 ஞாயிறு காலை 8 30மணிக்கு விஞ்ஞானம்பகுதி II
மாலை 1 00 மணிக்கு கணிதம் பகுதி II
29 11 93 திங்கள் மாலை 3 30மணிக்கு விஞ்ஞானம் பகுதி I
30.11.93 செவ்வாய் மாலை 3 30 மணிக்கு கணிதம் பகுதி I

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது சுட்டெண்களை முன்கூட்டியே பெற்று கொள்ளவும். மாணவர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 100 மாணவர்கள் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

மன்றக் கல்விக்குழு

இடம்:- யாழ்/வட்டு இந்துகல்லூரி

கலைநகர் தே.இ.சே மன்றம்
சித்தன்கேணி (சி-7970)

## நினைவு கூருகின்றோம்... 1993-11-21

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது காணாமற்போன 02 தமிழ்ப் பொறியியலாளர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு - கல்லடிப்பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**நிரான்** (ரூபசிங்கம் ரவிச்சந்திரன் - நாவலடி-மட்டு)

ஒலுமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**சிவா/பாலன்** (வெள்ளையன் இராஜேந்திரன் - நெடுங்கேணி - மணலாறு)

**லெப். கணேஷ்** (தில்லைநாயகம் டொமினிக்சாந்தன்-புலோப்பளை-பளை)

நாவற்காடுப்பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**தயா** (செல்லத்துரை விக்கினேஸ்வரன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை முல்லைத்தீவ)

1987ஆம் ஆண்டு ஆனைக்கோட்டைச்சந்திப் பகுதியில் இந்தியப்படையினர் தாக்குதல்களை மேற்கொண்ட சமயம் பதுங்குகுழியினுள் இருந்த போது படுகொலை செய்யப்பட்டு, எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை, 3 பெண்கள், ஒரு ஆண் ஆகிய 05 பேர்.

1988ஆம் ஆண்டு கைதடிப்பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**றோகன்** (சின்னப்பர் றோகான் - இல;டி 14, தொடர்மாடி, குருநகர்-யாழ்)

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தம்பிராசா சங்கரன்**

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**தஜலட்சுமி** (கிருபையம்மா பேரின்பம்-கிரான், மட்டு)

கௌரவிக்கப்பட்டார். யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் ஆரம்ப கீழ்ப்பிரிவில் முதலாமிடத்தை வென்ற செல்வி சிறிமகள் சிறீரங்கநாதனுக்கு அண்மையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தங்கப்பதக்கத்தை வழங்கினார். இத்தங்கப்பதக்கம் வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் அன்பளிப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது காவல் நிலைகளிலிருந்து கடந்த வியாழன் இரவு 11-00 மணியளவில் சுழிபுரம், பண்ணாகம், சாந்தைப் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததினால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

(41)


## மாவீரர் நினைவாக

மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் இன்று நல்லூர் சங்கிலியன் தோப்பு பகுதியில் மூத்தநயினார் வீதி; கோண்டாவில் வடமேற்கு பாரதி வீதி; சுண்டுக்குழி காட்டுக் கந்தோர் வீதி; மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் மத்தி. வெள்ளவாய்க்கால்கள், நவாலி தெற்கு சமவீதி என்பவற்றை துப்புரவு செய்வதிலும், சங்கானை மத்தி விளாவெளி மயானத்தைத் துப்புரவு செய்வதிலும் சங்கானை கிழக்கு தெற்கு பகுதிகளில் மரநடுகை செய்வதிலும் ஈடுபடவுள்ளனர்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம் நடாத்தும் மாவீரர் விழா நாளை ஞாயிறு முதல் வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. உபதலைவர் ச. த. கணநாதன் மற்றும் பொது முகாமையாளர் த. பரஞ்சோதி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். விழாத் தொடர்பாக பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன



அமரர்

## கணபதி கிருஷ்ணபிள்ளை

மலர்வு: 06. 10. 1927 உதிர்வு: 22. 10. 1993

இவ்வுலகில் எம் வாழ்வை உயரவைத்த குலவிளக்கே
வாசம் விட்டு எங்கு சென்றீர் பாரினில் எமைவிட்டு
கோரநோயை கொடுத்தீசன் கூப்பிட்டானோ
உனை அங்கு
உங்களின் அமைதி வேண்டி அன்புடன் நிற்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், மலர்மாலை அணிவித்து அனுதாப அஞ்சலி நிகழ்த்திய எமது கலைவாணி ச. ச. நிலையத்தினருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்து 21 - 11 - 93 (ஞாயிறு இன்று) நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும், கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: இராசம்மா - கிருஷ்ணபிள்ளை

| பிள்ளைகள்: | மருமக்கள்: |
|---|---|
| தங்கவேலாயுதம் | - தவமலர் |
| ஜெகதாசன் (சுவிஸ்) | - வளர்மதி |
| ஜெகதீஸ்வரன் (சுவிஸ்) | - யோகநாயகி |
| ஜெகநாதன் (சுவிஸ்) | |
| கலாவதி | - அண்ணாத்துரை (ஜேர்மன்) |
| திலகவதி | - லோகநாதன் |
| புஸ்பராணி | - ஜெயகுணராஜா |
| சிவராணி | |
| யோகராணி | |
| அன்புராஜா (லண்டன்) | - பேரன் |

மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை.

(6630)





## லெப்.கணேஷ் 2-ம் லெப்.தினேஷ்

| செல்வன் | செல்வன் |
|---|---|
| தி. டொமினிச்சந்தன் | தி. அன்ரன் தினேஷ் |
| பிறப்பு: 05-08-1964 வீரச்சாவு: 21-11-1986 | பிறப்பு: 13-06-1969 வீரச்சாவு: 27-11-1989 |

"உங்கள் சுவடுகளில் தொடரும்
எங்கள் பாதங்கள்"

"சாந்திநேஷ்"
பளை,
குடும்பத்தினர், நண்பர்கள்.

(6643)

## அந்தியேட்டி அழைப்பிதழ்



திருமதி

## இரத்தினம் பாக்கியம்

வையகம் 1922- 01- 23 வானுலகம் 1993- 10- 15

பட்சணத்தைப் பகிர்ந்தளித்து
பட்டினியாய் தானிருந்து
அன்பை வாரிக் கொடுத்து
அனைவரையும் ஆதரித்து
கண்ணின் இமையாய்
குடும்பத்தை காத்திட்ட அம்மாவே.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

[22. 11. 93] திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயறுரும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

எமது அன்புத் தாயாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"புவன பதி"
சங்கத்தானை,
சாவகச்சேரி.

ச. இரத்தினம் குடும்பத்தினர்.
[வதனி ஜுவலறி]

(6638)

வீரச்சாவெய்திய,

**தயா** (செல்லத்துரை விக்கினேஸ்வரன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை முல்லைத்தீவு)

1987ஆம் ஆண்டு ஆனைக்கோட்டைச்சந்திப் பகுதியில் இந்தியப்படையினர் தாக்குதல்களை மேற்கொண்ட சமயம் பதுங்குகுழியினுள் இருந்த போது படுகொலை செய்யப்பட்டு, எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை, 3 பெண்கள், ஒரு ஆண் ஆகிய 05 பேர்.

1988ஆம் ஆண்டு கைதடிப்பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**றோகன்** (சின்னப்பர் றோகான் - இல;டி 14, தொடர் மாடி., குருநகர்-யாழ்)

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தம்பிராசா சங்கரன்**

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**கஜலட்சுமி** (கிருபையம்மா பேரின்பம்-கிரான்,மட்டு)

**பூங்குயில்** (சாந்தினி மாரிமுத்து -வட்டக்கச்சி கிளிநொச்சி

**லக்கி** (மனோரஞ்சிதாதேவி கார்த்திகேசு-சாமலோடை, காரைநகர்-யாழ்)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நாமகள்** (தேவமனோகரி வைரமுத்து - முன்னம்பேடி வெட்டை, தோப்பூர் திருமலை)

**அறிஞன்** (சாகேஸ்வரன் ஜெயராஜ் செல்வநாயகபுரம்-திருமலை)

யாழ் வடமராட்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரின் விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஞானம்** (ராமசாமி சந்திரலிங்கம் - தலவாக்கொல்லை-கண்டி)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ஜெகன்** (சுந்தரலிங்கம் சுரேஸ்குமார் - செம்மலை மணலாறு)

**லெப். மாலி** (துரைராஜா முத்துக்குமார் - நெடுங்கேணி மணலாறு)

யாழ் - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனானநேரடிச்சமரில்வீரச்சாவெய்திய-

**கணேஷ்** (சித்திரவேலாயுதம் பிரபாகரன் - இருபாலை கோப்பாய் - யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம்-கீரிமலைப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**சரவணன்** (கிருஷ்ணசாமி கணேசலிங்கம் - குமரபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

**நெல்சன்** (வீரசிங்கம் இந்திரகுமார் - கிளிநொச்சி)

**லெப். நெவில்** (நடராசா நாகேஸ்வரன் - அச்செழு, நீர்வேலி - யாழ்)

**லெப். தம்பி** (கந்தசாமி தம்பி - மயிலிட்டி, காங்கேசன் துறை - யாழ்)

**செழியன்** (சிதம்பரப்பிள்ளை சற்குணராசா ஒட்டுமடம்யாழ்

**கணேஷ்** (நாகசோதி ஜீவநேசம் - புத்தூர் - யாழ்)

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட வசாவிளான் குட்டிய புலத்தைச் சேர்ந்த பொதுமகன்,

1992 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, கற்சிலைமடுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

அம்பாறை-களுவாஞ்சிக்குடியை அண்மிய தாவளைக் கிராமப்பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/7966)

நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

எல்லாமே, முன்பு எப்பொழுதாவது எண்ணப் பட்டது தான். அதை மீண்டும் எண்ணாமல் போவதில்தான் பிரச்சினை எழுகிறது.

.யொஹன் கேத்ஜெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## பூனைபோல் டி.பியும்

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கண்களை மூடிக்கொண்டு பாலைக்குடிக்கும் பூனையைப் போன்று சிந்திக்கின்றார்: உலகம் இருண்டு விட்டதான பூனையின் எண்ணம் எந்தளவிற்கு யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதோ. அதே போன்று டி. பி. விஜேதுங்கவின் பேச்சுக்களும் நடத்தைகளும் உண்மைக்குப் புறம்பானவை யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டவை.

அதாவது, இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்ற டி.பி. விஜேதுங்கவின் பேச்சு எவ்வாறு உலகால் ஏற்றுக் கொள்ள முடியாததோ, அதுபோன்றதே கிழக்கை இராணுவம் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது என்பதும், கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது எனக்கூறிக் கொண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடத்த முற்படுவதும் ஆகும்.

ஆனால், நெருக்கடிகளின் மத்தியிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதன் மூலம் ஐ. தே. க அரசாங்கம் அரசியல், இராணுவ அனுகூலங்களை அடைய முற்படுகின்றது. முதலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கான அடித்தளத்தை இடப் பார்க்கின்றது. அடுத்ததாக, கிழக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதெனவும், அங்கு ஜனநாயக அமைப்புக்கள் செயற்படத் தொடங்கி விட்டதாகவும் காட்ட முற்படுகின்றது.

மேலும், தற்பொழுது பூநகரி முகாமில் இராணுவம் சந்தித்த பெரும் தோல்வியைத் தொடர்ந்து அரசிற்கு உருவாகியுள்ள நெருக்கடியை திசை திருப்ப, கிழக்கை வென்று விட்டதாக சிங்களவருக்குக் காட்ட முற்படுகின்றது. இதன் மூலம் சிங்களவருக்கு அரசாங்கத்தின் மீதும் இராணுவத்தினரின் மீதும் இருந்த நம்பிக்கையீனத்தைப் போக்க முனைந்து நிற்கின்றது.

இதேவேளை, கிழக்கில் தேர்தல் நடத்துவதன் மூலம் இராணுவத்தினரிடம் தற்பொழுது உருவாகியுள்ள மனச் சோர்வைப் போக்கி போரில் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையை ஊட்ட முயலுகின்றது. இதன் மூலம், வடக்கில் தாக்குதல்களைத் தீவிரமாக்க இராணுவத்திற்கு உற்சாகம் ஊட்டவும் முனைகின்றது.

ஆனால், கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கான சந்

# மீட்புநிதிக் கடன் மீளளிப்பு 1993

### கரவெட்டி
### யா/க

**தை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 38 | 06. | 1012 |
| 02. | 55 | 07. | 1342 |
| 03. | 282 | 08. | 3191 |
| 04. | 771 | 09. | 3244 |
| 05. | 896 | 10. | 3526 |

**மாசி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 216 | 06. | 2303 |
| 02. | 244 | 07. | 2385 |
| 03. | 289 | 08. | 3414 |
| 04. | 903 | 09. | 4185 |
| 05. | 1027 | 10. | 4764 |

**பங்குனி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 202 | 06. | 1920 |
| 02. | 389 | 07. | 2049 |
| 03. | 507 | 08. | 3168 |
| 04. | 586 | 09. | 3428 |
| 05. | 1627 | 10. | 3912 |

**சித்திரை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 147 | 06. | 1663 |
| 02. | 321 | 07. | 1745 |
| 03. | 335 | 08. | 2379 |
| 04. | 936 | 09. | 3646 |
| 05. | 1295 | 10. | 4828 |

**வைகாசி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 10 | 06. | 1109 |
| 02. | 175 | 07. | 1464 |
| 03. | 347 | 08. | 1470 |
| 04. | 608 | 09. | 2452 |
| 05. | 791 | 10. | 3181 |

**ஆனி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 69 | 06. | 1575 |
| 02. | 183 | 07. | 2464 |
| 03. | 416 | 08. | 3531 |
| 04. | 804 | 09. | 3704 |
| 05. | 958 | 10. | 4637 |

**ஆடி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 161 | 06. | 1002 |
| 02. | 234 | 07. | 1360 |
| 03. | 418 | 08. | 1836 |
| 04. | 728 | 09. | 3049 |
| 05. | 815 | 10. | 3616 |

**ஆவணி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 148 | 06. | 2246 |
| 02. | 453 | 07. | 3803 |
| 03. | 573 | 08. | 3817 |
| 04. | 765 | 09. | 4347 |
| 05. | 902 | 10. | 4353 |

**புரட்டாதி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 94 | 06. | 1024 |
| 02. | 309 | 07. | 1129 |
| 03. | 521 | 08. | 2111 |
| 04. | 803 | 09. | 3810 |
| 05. | 994 | 10. | 4307 |

**ஐப்பசி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 606 | 06. | 2672 |
| 02. | 685 | 07. | 3341 |
| 03. | 826 | 08. | 4280 |
| 04. | 937 | 09. | 4543 |
| 05. | 1035 | 10. | 4613 |

**கார்த்திகை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 11 | 06. | 2149 |

**ஆனி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 412 | 05. | 790 |
| 02. | 550 | 06. | 874 |
| 03. | 665 | 07. | 877 |
| 04. | 763 | 08. | 1327 |

**ஆடி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 172 | 05. | 2461 |
| 02. | 239 | 06. | 2873 |
| 03. | 1903 | 07. | 2904 |
| 04. | 2010 | 08. | 4286 |

**ஆவணி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 278 | 05. | 864 |
| 02. | 451 | 06. | 2934 |
| 03. | 458 | 07. | 3161 |
| 04. | 546 | 08. | 3436 |

**புரட்டாதி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 110 | 05. | 2463 |
| 02. | 320 | 06. | 2603 |
| 03. | 801 | 07. | 4142 |
| 04. | 909 | 08. | 4283 |

**ஐப்பசி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 11 | 05. | 820 |
| 02. | 26 | 06. | 2530 |
| 03. | 42 | 07. | 2837 |
| 04. | 340 | 08. | 4021 |

**கார்த்திகை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 16 | 05. | 419 |
| 02. | 153 | 06. | 2614 |
| 03. | 260 | 07. | 3356 |
| 04. | 319 | 08 | 3922 |

### சாவகச்சேரி
### யா/சா

**தை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 102 | 08. | 4436 |
| 02. | 244 | 09. | 4537 |
| 03. | 1483 | 10. | 4575 |
| 04. | 1826 | 11. | 5354 |
| 05. | 1932 | 12. | 5457 |
| 06. | 2441 | 13. | 6708 |
| 07. | 3176 | | |

**மாசி**

| | | | |
|---|---|---|---|
| 01, | 28 | 08. | 3118 |
| 02. | 160 | 09. | 3272 |
| 03. | 565 | 10. | 3458 |
| 04. | 666 | 11. | 5746 |
| 05. | 715 | 12. | 6151 |
| 06. | 1507 | 13. | 6368 |
| 07. | 1651 | | |

**பங்குனி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 324 | 08. | 2852 |
| 02. | 480 | 09. | 3001 |
| 03. | 673 | 10. | 4045 |
| 04. | 1064 | 11. | 4352 |
| 05. | 1449 | 12. | 6120 |
| 06. | 1606 | 13. | 6752 |
| 07, | 2346 | | |

**சித்திரை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 18 | 08. | 2873 |

| | | | |
|---|---|---|---|
| 03. | 664 | 10. | 6105 |
| 04. | 1658 | 11. | 6123 |
| 05. | 1943 | 12. | 6623 |
| 06. | 2445 | 13. | 6872 |
| 07. | 2833 | | |

**புரட்டாதி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 93 | 08. | 1104 |
| 02. | 323 | 09. | 2372 |
| 03. | 364 | 10. | 5775 |
| 04. | 450 | 11. | 6233 |
| 05. | 525 | 12. | 6488 |
| 06. | 593 | 13. | 6602 |
| 07. | 649 | | |

**ஐப்பசி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 154 | 08. | 2133 |
| 02. | 217 | 09. | 2136 |
| 03. | 536 | 10. | 3813 |
| 04. | 672 | 11. | 4133 |
| 05. | 950 | 12. | 4697 |
| 06. | 1282 | 13. | 6552 |
| 07. | 1375 | | |

**கார்த்திகை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 58 | 08. | 3969 |
| 02 | 134 | 09. | 4409 |
| 03. | 156 | 10. | 4435 |
| 04. | 309 | 11. | 4610 |
| 05. | 635 | 12. | 4896 |
| 06. | 1162 | 13. | 7037 |
| 07. | 3366 | | |

### பச்சிலைப்பள்ளி
### கி/ப

**தை**

01. 596

**மாசி**

01. 464

**பங்குனி**

01. 148

**சித்திரை**

01. 503

**வைகாசி**

01. 499

**ஆனி**

01. 335

**ஆடி**

01. 263

**ஆவணி**

01. 24

**புரட்டாதி**

01. 95

**ஐப்பசி**

01. 198

**கார்த்திகை**

01. 534

### வெளியகல்வு
### யா/வெ

**தை**

| | | | |
|---|---|---|---|
| 01. | 182 | 02 | 862 |
| 03. | 1054 | | |

**மாசி**

## மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ.க.வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

01. லெப். பரன் தியாகராசா மோகன்ராஜா மன்னார்
02. வீ.வே. ராஜபாரதி நாகலிங்கம் சிறிகலா...ன் மட்டக்களப்பு
03. 2-ம் லெப். ஜெயந்திரன்/ஜெயச்சந்திரன் சுந்தப்பர் தவராசா ,,
04. லெப். ரூபன் கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் திருமலை
05. வீ.வே சிலன் குட்டி தெய்வேந்திரம் முல்லைத்தீவு
06. 2-ம் லெப். நாராயணன் நாகமுத்து யோகலிங்கம் பருத்தித்துறை
07. வீ.வே. கில்பேட் மயில்வாகனம் விஜயகுமார் திருமலை
08 2-ம் லெப். இலக்கியன் கதிர்காமு ரவீந்திரராசா அரியாலை
09. வீ.வே. செங்கண்ணன் இராசரத்தினம் ரகுநாதன் கரவெட்டி
10. வீ.வே. முகிலா தேவிகா ஞானப்பிரகாசம் கிளிநொச்சி
11. 2-ம் லெப். விக்ரம் அருளானந்தராஜா சுந்தரராஜா முல்லைத்தீவு
12. லெப். முரளி எட்வின் சிறி மட்டக்களப்பு
13. வீ.வே. பில்லா முருகன் முத்தையர் நந்தபாலன் உரும்பராய்
14. 2-ம் லெப். சில்வா தங்கவேல் நாகராசா மன்னார்
15. வீ.வே. சதீஸ்குமார் தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம் பளை
16. வீ.வே. சிசில் இராமையா பொன்னம்பலம் இராஜேந்திரன் பூநகரி
17. வீ.வே. ஜெயராமன் சந்திரசேகர் உதயகுமார் சாவகச்சேரி
18. வீ.வே. ஆனந்தபாபு தங்கராசா நடராசா மட்டக்களப்பு
19. கப்டன் நிறையன் இராமமூர்த்தி விதுரன் ,,
20. வீ.வே. சைமன் சைமன் அந்தோனி ஜோசப் மைக்கல் திரதீப் மானிப்பாய்
21. வீ.வே. திலகன் அருணாசலம் திலகன் மட்டக்களப்பு
22. வீ.வே. நித்தியானந்தன் சிவசிதம்பரம் சிவகுமார் சுன்னாகம்
23. வீ.வே. விஜிதா பத்மாதேவி நன்னித்தம்பி சித்தன்கேணி
24. வீ வே. பகீர் ஜெயராசா சுனில் இலவாலை
25. வீ.வே. அங்குதன்/அங்கதன் கந்தன் நடராசா ராஜ்குமார் இணுவில்
26. லெப் உபாலி இராசதுரை பிரபாகரன் முல்லைத்தீவு
27. வீ.வே. கிறிஸ்ரி வேலுப்பிள்ளை வேதநாயகம் சுழிபுரம்
28. வீ.வே. பாலச்சந்திரன் பியதாஸ ஜேசுதாசன் மன்னார்
29. வீ வே. டொமினிக் அருள் ஆனந்தராசா கிளிநொச்சி
30. மேஜர் லவன் துரைசிங்கம் ராஜ்சங்கர் கொழும்பு- 06
31. வீ.வே. கீறோ திருநாவுக்கரசு குசலவன் கிளிநொச்சி
32. வீ.வே. குலசிங்கம் இராசசிங்கம் றேமன் மட்டக்களப்பு
33. லெப். சந்திரன் சங்கரப்பிள்ளை அன்பரசன் மானிப்பாய்
34. மொறடோனா/நிரோனா கைலாயபிள்ளை சந்திரகுமார் திருமலை
35. லெப். குணேஸ் செல்வராசா பேரின்பமோகன் ஆதவன் புங்குடுதீவு
36. கப்டன் டயஸ் ஜஸ்கின்றோய் பேபியன் ஊர்காவற்றுறை
37. லெப். வர்மன் பாஸ்கரமூர்த்தி சுந்தரமூர்த்தி மட்டக்களப்பு
38. வீ. வே. சங்கர் இந்திரலிங்கம் கிரிதரன் பருத்தித்துறை
39. 2-ம் லெப். ஜீவன் நடராசா சிவபாலன் கோண்டாவில்
40. ,, இதயன் சுப்பிரமணியம் சுந்தர் திருமலை
41. ,, அமராவதி நகுலேஸ்வரி பாலசிங்கம் ,,

ஆகும்.

ஆனால், நெருக்கடிகளின் மத்தியிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதன் மூலம் ஐ. தே. க அரசாங்கம் அரசியல், இராணுவ அனுகூலங்களை அடைய முற்படுகின்றது. முதலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கான அடித்தளத்தை இடப் பார்க்கின்றது. அடுத்ததாக, கிழக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதெனவும், அங்கு ஜனநாயக அமைப்புக்கள் செயற்படத் தொடங்கி விட்டதாகவும் காட்ட முற்படுகின்றது.

மேலும், தற்பொழுது பூநகரி முகாமில் இராணுவம் சந்தித்த பெரும் தோல்வியைத் தொடர்ந்து அரசிற்கு உருவாகியுள்ள நெருக்கடியை திசை திருப்ப, கிழக்கை வென்று விட்டதாக சிங்களவருக்குக் காட்ட முற்படுகின்றது. இதன் மூலம் சிங்களவருக்கு அரசாங்கத்தின் மீதும் இராணுவத்தினரின் மீதும் இருந்த நம்பிக்கையீனத்தைப் போக்க முனைந்து நிற்கின்றது.

